<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 27/2015

| | |
|---|---|
| Deposition of Witness | : DW 1 |
| Name | : வைத்தியநாதன் (வயது – 63) |
| Father's Name /W/o | : த/பெ தயானந்தம் |
| Religion | : இந்து |
| Calling | : – |
| Address | : கர்நாடக மாநிலம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.02.2026.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் 1 ஆம் பிரதிவாதி சுலோச்சனம்மாள் என் தாயார் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதி எனது மூத்த சகோதரன் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் 13 வயது வித்தியாசம் இருக்கும். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பற்றிய விபரம் என்னை விட என் அண்ணன் சீனிவாசனுக்கு (2 ஆம் பிரதிவாதி) தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 5 முதல் 8 வரை என் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான்.

2. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதி என் தகப்பனாருக்கு ரூ.2000 கொடுத்துவிட்டு பதிவு செய்யாத பத்திரம் வாங்கியுள்ளார் அதை குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் பத்திரம் வா.சா.ஆ – 1 இல் என் தகப்பானர் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது என்றால் மாங்காட்டுச்சேரி கிராமத்தில் உள்ளது.

3. 01.06.1978 தேதியில் கிரைய ஒப்பந்தம் போட்ட அன்றைய தேதியில் இருந்தே என் தந்தை கர்நாடகவில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் என் தந்தை நிலத்திற்கு மட்டும் போட்டாரா அல்லது வீட்டிற்கும் சேர்த்து போட்டாரா என்றால் இரண்டிற்கும் சேர்த்து தான் கிரைய ஒப்பந்த பத்திரம் போட்டார். கிரைய ஒப்பந்தம் எழுதிய தேதியன்று எனக்கு 7 அல்லது 8 வயது இருக்கும் என்றால் சரிதான். என் மூத்த சகோதர சகோதரிகளுக்கு 18 அல்லது 20 வயது இருக்கும் என்பதால் அவர்களுக்கு கிரைய ஒப்பந்தம் பற்றிய விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

4. நான் அப்போது திருவிழா சமயத்தில் மாங்காட்டுச்சேரி கிராமத்திற்கு வந்து செல்வோம் என்றால் சரிதான். என் தந்தை 2000 ஆம் ஆண்டு இறந்தார் என்றாலும் அவருடைய இறப்பு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். வா.சா.ஆ – 1 கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள நபர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றால் தெரியாது.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**